*17.11.2018-1:-* **முதலுதவி மையத்தைப் பார்வையிட்டார் திருத்தந்தை**



**“நான் எவ்வித தவறும் இழைக்கவில்லை என்பதால், நான் நன்றாக இருக்கின்றேன் என்ற நினைவால் எவரும் தன்னை ஏமாற்றி கொள்ளக் கூடாது. இயேசுவைப் பின்செல்பவராய் இருப்பதற்கு, தவறு செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது, ஏனெனில், நாம் ஆற்ற வேண்டிய நன்மையும் உள்ளது” என்ற வார்த்தைகள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டரில், 17, சனிக்கிழமையன்று பதிவாகி இருந்தன.**

மேலும், நவம்பர் 18, ஞாயிறன்று கடைப்பிடிக்கப்படும் இரண்டாவது உலக வறியோர் நாளை முன்னிட்டு, வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முதலுதவி மையத்தை, எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, வெள்ளியன்று பார்வையிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இம்மையத்தில் பணியாற்றும் மருத்துவர்களையும், அங்கு சிகிச்சை பெறுகின்ற நோயாளர்களையும் சந்தித்து, ஆசி வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இம்மையம், உலக வறியோர் நாளை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுகோளின்பேரில் அமைக்கப்பட்டுள்ளது.